Registered as Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 125 | வியாழக்கிழமை 31 மார்ச் 2022 | பங்குனி 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30

## உதயன் இனி 40ரூபா!

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பத்திரிகைக்கான காகிதாதிகள், அச்சுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விலைகள் வெகுவாக அதிகரித்திருக்கின்றன. கடந்த சில மாதங்களாகவே நீடித்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகளைத் தாங்கியவாறே "உதயன்" வெளிவந்துகொண்டிருக்கிறான்.

ஆயினும் இந்த நெருக்கடிகள் தீர்வின்றித் தொடரும் நிலையில், எமது இயலுமை நிலையையும் தாண்டிய இந்த அசாதாரண நிலையைச் சமாளிப்பதற்காக விலையில் சிறிய அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு "உதயன்" ஆளாகியிருக்கின்றான். 01.04.2022 (நாளை) முதல் உதயன் நாளிதழின் விலையை 40 ரூபாவாகவும், உதயன் வார இதழின் (சஞ்சீவி + உதயன்) விலையை 50 ரூபாவாகவும் நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்த காலத்தில் "உதயனுக்கு" பக்கபலமாக நின்ற வாசகர்கள், தற்போதைய நெருக்கடி நிலைமையை உணர்ந்து தோளோடு தோள் நிற்பார்கள் என்று "உதயன்" நம்புகின்றான். இந்த விலை மாற்றத்தை பொறுத்தருளி, இதுவரை காலமும் வழங்கிய உங்கள் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று அன்புரிமையோடு "உதயன்" எதிர்பார்க்கின்றான். (ஆ-ர்)

# இலங்கை முடங்கும்?

- அரை நாளுக்கும் மேல் மின் துண்டிப்பு
- தொழில்துறைகள், போக்குவரத்து முடங்கும் அபாயம்

கொழும்பு, மார்ச் 31

பொருளாதார நெருக்கடிகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், இலங்கை முடக்கும் நிலையை எட்டியுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். எரிபொருள் பற் 15 >

## இன்று 13 மணிநேரம் மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் இன்று 13 மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று 15 >

## 15 மணித்தியாலங்கள்வரை மின் துண்டிப்பு நீடிக்கலாம்

எச்சரிக்கிறது மின்சார பொறியியலாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி மற்றும் வறட்சியான காலநிலை காரணமாக நாளாந்த 15 >

## மின் கட்டண நிலுவை செலுத்தாவிடின் 'கட்'

கொழும்பு, மார்ச் 31

பல மாதங்களாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத வாடிக்கையாளர்களின் மின்சார இணைப்பைத் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் 15 >

## எரிபொருள் தட்டுப்பாடு ஏப். 5 வரை நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதிவரை தொட 15 >

## பாடசாலை சேவைகளும் நிறுத்தப்படும் அபாயம்

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காணாவிட்டால் 15 >

# வடக்கு மாகாண மருத்துவமனைகள் சத்தம் சந்தடியின்றி மத்தியின் வசம்?

வவுனியா மருத்துவமனைக்கு மத்திய அரசின் பாதுகாப்பு ஊழியர்கள் அனுப்பப்பட்டதால் சர்ச்சை

**யாழ்ப்பாணம், மார்ச் 31**

**வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 4 மருத்துவமனைகளை மத்திய அரசின்கீழ் உள்வாங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கிடப்பில்போடப்பட்டிருந்த நிலையில், திடீரென வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு மத்திய அரசின் பாதுகாப்பு ஊழியர்கள் கடமைக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.** 15 >

## எரிவாயு விநியோகிக்கும் இடங்களாக மாறும் வடக்கு திணைக்களங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் பணிபுரிவோருக்கு எரிவாயு விநியோகிக்க எடுக்கப்பட்ட 15 >



எரிபொருளுக்காக நீண்ட நேரம் காத்திருந்த மக்கள் கொதிப்படைந்ததால் ரவுண்ஹோலில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று குழப்பநிலை உருவானது. பொலிஸார் உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். எரிபொருள் கிடைக்காததால் நாட்டின் பல இடங்களில் மக்கள் கொதிப்படைந்து போராட்டம் நடத்திய சம்பவங்கள் நேற்றுப் பதிவாகியுள்ளன. (அ-இ)

## யாழில் பதுக்கிய டீசலை கைப்பற்றிய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

எரிபொருள் நிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் 15 >

## முறிகண்டியில் கோர விபத்து: பிரதேசசபை ஊழியர் சாவு!



முல்லைத்தீவு, மார்ச் 31

மாங்குளம், முறிகண்டிப் பகுதியில் நடந்த விபத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை 10 >

## அவுஸ்திரேலியாவுக்கு நுழைவதற்கு ஜெனரல் ஜெகத் ஜெயசூரியாவுக்கு தடை விதிக்குமாறு கோரிக்கை!

கொழும்பு, மார்ச் 31

இலங்கையின் ஓய்வுபெற்ற ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா அவுஸ்திரேலியாவுக்குள் நுழை 10 >

## பல வீடுகளில் கைவரிசை; 24 வயது இளைஞர் கைது!

வவுனியா, மார்ச் 31

போதைப்பொருள் விற்பனை மற்றும் வீடுகளுக்குள் புகுந்து திருடியமை போன்ற குற்றச் 10 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசல் இருக்காது வரிசை வேண்டாம்




**கொழும்பு, மார்ச் 31**

**டீசல் பெற்றுக் கொள்வதற்காக, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.**

திட்டமிட்டவாறு 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலுடன் வந்த கப்பலில் இருந்து, டீசலை இறக்க முடியாமல் போயுள்ளது.

இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசலை விநியோகிக்க முடியாது. எனினும் அத்தியாவசிய சேவைகளுக்காக தொடர்ச்சியாக டீசல் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-4,இ)

## அத்தியாவசிய தேவைக்கே இனி டீசல் வழங்கப்படும்!



கொழும்பு, மார்ச் 31

இந்தியாவிடமிருந்து டீசலைப் பெற்றுக்கொள்ளும் வரை, மின்னுற்பத்திக்கும் அத்தியாவசியத் தேவைக்குமே டீசல் இனிவரும் நாள்களில் வழங்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவிடமிருந்து டீசலைப் பெற்றுக்கொள்ளும் வரை ஐ.ஓ.சியிடமிருந்து டீசல் கொள்வனவு செய்து விநியோகிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கையிருப்பில் இருக்கும் டீசல் மின்னுற்பத்திக்கும் அத்தியாவசியச் சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கும் மாத்திரமே வழங்கப்படும் - என்றார்.

(ம)

## இலங்கை – இந்திய உறவை சீர்குலைக்கிறார் ஜெய்சங்கர்

### *ராஜபக்சக்களின் சகாவான சு.சுவாமி ஆதங்கம்*



கொழும்பு, மார்ச் 31

இலங்கை - இந்திய உறவைச் சீர்குலைக்கும் வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி விமர்சித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாள் உத்தியோகபூர்வ அரச பயணமாக இலங்கை வந்துள்ளார். இந்த விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் உட்பட பல உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். கொழும்பில் உள்ள லங்கா இந்தியன் ஓயில் நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் அவர் விஜயம் செய்தார். அங்கு இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஜெய்சங்கரின் இந்த நடவடிக்கை குறித்துக் கருத்து தெரிவித்த பாரதிய ஜனதா கட்சியின் மூத்த எம்.பி. சுப்பிரமணியன் சுவாமி, " பயணத்தின் போது முன்னாள் கமிஷனர்போல் ஜெய்சங்கர் கொழும்பில் சுற்றித் திரிந்தார்" என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 'இலங்கை அரசாங்கம் பெற்றோல் தட்டுப்பாட்டைத் திறமையாக நிர்வகிக்கிறதா என்பதைச் சரிபார்க்க அவர் பெற்றோல் பங்க் ஒன்றைக் கூட ஆய்வு செய்தார். அவர் எம் உறவுகளை அழிக்க விரும்புகிறாரா? இந்தியாவில் ஏன் ஆய்வு செய்யக் கூடாது?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

சு.சுவாமி, ராஜபக்சக்களின் நீண்டநாள் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

## தைத்த ஆடைகளின் விலை 40 வீதத்தால் உயர்வு



கொழும்பு,மார்ச் 31

தைத்த ஆடைகளின் விலை சுமார் 40 வீதத்தால் உயர்வடைந்துள்ளது என்று இலங்கை சிறு கைத்தொழிலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிலுக்ஸ குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மின்சாரத் தடை, டொலர் பற்றாக்குறை மற்றும் மூலப்பொருள் தட்டுப்பாடு காரணமாக தைத்த ஆடைகளின் விலை அதிகரித்துள்ளது.

குறிப்பாக மஹரகம பமுனுவப் பகுதியில் புத்தாண்டுக் காலத்தில் 200, 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தைத்த ஆடைகள் தற்போது 800 முதல் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யப் பயன்படும் மூலப்பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.

600 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட நூல் ஆயிரத்து 800 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது. அத்துடன் சிறு ஆடை உற்பத்தி நிலையங்கள் மின்சாரத் தடையால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது - என்றார்.

(ஒ-4,இ)

## தரமற்ற எரிபொருள்கள் விநியோகத்தில் இல்லை

கொழும்பு,மார்ச் 31

தரமற்ற எரிபொருள்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை. அவ்வாறான போலியான பிரசாரத்தை முன்னெடுத்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவிக்கையில்;

தரம் குறைந்த எரிபொருள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுவிக்கப்படவில்லை. கப்பலுக்கு ஏற்றப்படும் போது எரிபொருளின் தரம் குறித்து ஆராயப்படும். இரசாயன அறிக்கையும் பெறப்படும். பின்னர் கொழும்புத் துறைமுகத்தை கப்பல் வந்தடைந்ததும் எரிபொருள் மாதிரிகள் பெறப்பட்டு, இரண்டு ஆய்வு கூடங்களில் ஆராயப்படும்.

எரிபொருளை நாளாந்தம் விடுவிப்பதற்கு முன்னர் மொத்த களஞ்சியசாலைகளின் குதங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இவ்வாறான செயற்பாடுகளின் பின்னரே, எரிபொருள் விநியோகிக்கப்படும். எனவே போலியான பிரசாரங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட ஆலோசனைகள் பெறப்படும் - என்றார். (ஒ-4,இ)

## குடும்ப நலப்பணியாளர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,மார்ச் 31

குடும்பநல சுகாதார சேவைகள் பணியாளர்கள், இன்று முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

30 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்த குடும்ப நல சுகாதார சேவைகள் பணியாளர்களுக்கு, விசேட தரத்துக்கான பதவி உயர்வு வழங்குவதை இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-4,இ)

# எரிபொருளுக்கு தீர்வில்லையேல் நாடளாவிய ரீதியில் போராட்டம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் சேவை விநியோகக் கட்டமைப்பில் காணப்படும் சிக்கல் நிலைமைக்கு அரசாங்கம் இந்த வாரத்தில் தீர்வைத் தரவேண்டும். இல்லாவிடில் அடுத்த வாரம் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் கொள்வனவுக்காக தனியார் பேருந்து உரிமையாளர் [illegible] வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் சேவை விநியோக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு அரசாங்கம் இந்த வாரத்துக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்காவிடின் எதிர்வரும் வாரம் முதல் நாடு தழுவிய ரீதியில் பணிபுறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

எரிபொருள் தட்டுப்பாடு என எம்மால் தொடர்ந்து புலம்பிக் கொண்டிருக்க முடியாது. ஐ.ஓ.சி நிறுவனம் எவ்வித கட்டுப்பாடுமின்றி எரிபொருள் விலையை அதிகரித்த வண்ணம் உள்ளது. சிபெட்கோ எரிபொருள் நிலையத்திலும் எரிபொருள் பற்றாக்குறை காணப்படுகிறது. இதனால், தனியார் பேருந்து உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், மறுபுறம் லீசிங் பிரச்சினைக்கும் தீர்வுகாண வேண்டியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இவ்வார காலத்துக்குள் அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் வாரம் முதல் நாடுதழுவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்நெருக்கடி தொடரும்!



## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 31**

**எதிர்வரும் சில நாள்கள் மின்நெருக்கடி தொடரும் என்று இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மின்நெருக்கடி நாளுக்குநாள் மோசமாகி வருகின்றது.
இதனால் அரச நிறுவனங்களில் வீட்டிலிருந்து வேலைசெய்யும் முறைக்கு செல்லுமாறு அரசாங்கத்துக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
இதற்குத் தீர்வுகாண எந்த நிறுவனமும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நிதி நெருக்கடியால் இந்த மின் நெருக்கடி ஏற்பட்டது - என்றார். (ம)


# எரிபொருள் கடனில் இந்தியா தாராளம்!

- ரூ.500 மில்லியன்
- ரூ.750 ஆகின்றது

கொழும்பு, மார்ச் 31
எரிபொருளுக்கான 500 மில்லியன் டொலர் கடன் வசதியை அதிகரிக்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கைக்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.
இதன்படி 500 மில்லியன் டொலர் கடனுதவி 750 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக் கப்பட்டுள்ளது. குறித்த கடனுதவியின் இறுதிக் கட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# தொடர்ச்சியாக மின்சாரம் தடை வாழ்வாதார தொழில்கள் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 31
நாட்டில் தொடர்ச்சியாகத் நடைமுறையிலுள்ள மின்தடை காரணமாக, பலரது வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மின் ஒட்டுத்தொழிலாளர் கள், குளிர்பான விற்பனையாளர்கள் பலரும் பாதிக்கப்பட்டனர்.
தையல் தொழிலை வாழ்வாதாரமாக மேற் கொண்டு வரும் பெண்கள், தையல் இயந்திரங் களைப் பயன்படுத்த முடியாதுள்ளனர்.
அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்க முடியாதுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4-113)



# தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு டீசல்

கொழும்பு, மார்ச் 31
மின்சாரத் தடையின்போது தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயற்படுவதை உறுதி செய்ய, தேவையான டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.
அதற்கமைவாக 3 ஆயிரம் லீற்றர் டீசல் விடுவிக்கப்படுகின்றது. மின்வெட்டு நீடிப்பதால், எரிபொருள் நெருக்கடியால் பல பகுதிகளில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயற்படுவதில் இடையூறு ஏற்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-4-இ)

### கல்கிசை - காங்கேசன்துறை

# ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி புதிய ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 31
கல்கிசை முதல் காங்கேசன்துறை வரையிலான புதிய ரயில் சேவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.
இதன்படி கல்கிசையில் இருந்து இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கும் ரயில் வவுனியாவை அதிகாலை 3.15 மணிக்கும், கிளிநொச்சியை 4.25 மணிக்கும், யாழ்ப்பாணத்தை 5.28 மணிக்கும், காங்கேசன்துறையை 5.54 மணிக்கும் வந்தடையும். பின்னர் ஞாயிற்றுக்கிழமை (10ஆம் திகதி) இரவு 10 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் யாழ்ப்பாணத்தை 10.24 மணிக்கும் கிளிநொச்சியை 11.29 மணிக்கும் வவுனியாவை 12.38 மணிக்கும், மருதானையை 5.20 மணிக்கும், கல்கிசையை 5.54 மணிக்கும் சென்றடையும். (ம)

# சாவகச்சேரி பஸ் நிலைய கட்டடத் திறப்பு விழா



சாவகச்சேரி, மார்ச் 31
100 நகரங்களை அழகுபடுத்தப்படும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் 20 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பேருந்து நிலையக் கட்டடம் நாளை மறுதினம் முற்பகல் 11 மணிக்கு திறக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளது.
நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக நகர அபிவிருத்தி கழிவுப்பொருள்கள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா கலந்துகொள்வார். (ஓ-14-9)




**வவுனியாவில வீணைக்கார எம்.பி. லொட்ஜ்களில ஆடின கதகளி போட்டோவா வந்து ரெண்டிங் ஆனதெல்லோ. அந்தப் போட்டோக்களை எல்லாம் பேஸ்புக்கில போட்டு எம்.பியின்ர பேரை சந்திசிரிக்க வைச்ச பெடியனை நேற்றுக் கொஞ்சப் பேர் நொச்சிமோட்டையில வைச்சு அடி அடியெண்டு அடிச்சிருக்கிறாங்கள். அதுக்குப் பிறகும் ஆத்திரம் அடங்காமல் அந்தப் பெடியனைத் தூக்கிக் கொண்டு போய், அவரின்ர வீட்டுக்கு கிட்டவும் வைச்சு அடிச்சுப் போட்டு, அதே இடத்திலேயே ஆளையும் விட்டிட்டு போட்டாங்கள். இப்பிடி அந்தப் பெடியனை அடிச்சதையும், அதுக்குபிறகு பாதிக்கப்பட்ட பெடியன் ஆஸ்பத்திரியில இருக்கிறதையும், பேஸ்புக்கில வீடியோவாப் போட்டிருக்கு. தன்னை மானங்கெடுத்தினவரை எம்.பிதான் ஆளை வைச்சு அடிச்சிருப்பாரோ எண்டு சனம் கதைக்குது. அதைவிட அடிவாங்கின பெடியன் தனக்கு நடந்த சம்பவத்தை சொல்லுற வீடியோவைப் போட்டது எம்.பி இருக்கிற அதே கட்சிக்கார உறுப்பினர் ஒராள்தான்.**

**இப்பிடி சொந்தக்கட்சி எம்.பியைப் பற்றி விடுகிற பிழையை துணிஞ்சு அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருத்தர் பேஸ்புக்கில போடுறதுக்கு தில் வேணும்தான். ஆனால் அப்பிடி ஒரு தில் தானா வரேலை.மேல் மட்டத்தில இருந்து குடுக்கப்பட்டிருக்கு. என்னதான் வீணைக்கட்சியில எலக்சன் கேட்டு வெண்டாலும், வவுனியாக்கார எம்.பிக்கு கட்சிக்குள்ள நல்லபேர் இல்லை. அதோட ஏற்கனவே சனங்களிட்ட நாறிப்போயிருக்கிற அந்தக் கட்சியின்ர பேர் இப்பதான் கொஞ்சமெண்டாலும் மாறிக்கொண்டு வருகுது. இப்பிடியான நேரத்தில ஆக்களிட்ட காசை வேண்டிக்கொண்டு வேலைவாங்கித்தாறன் எண்டு வவுனியாக்கார வீணைக்கார எம்.பி கனக்க விளையாட்டுக்கள் காட்டியிருக்கிறாராம். அதோட வவுனியாவில தன்னைக் கேக்காமல் கட்சிக்காரர் எந்தவொரு வேலையும் செய்யக்கூடாது எண்டும் ஓடர் போட்டிருக்கிறார். அதால இவருக்கு முதலே கட்சியில இருக்கிறவைக்கு கடுப்போ கடுப்பு. அதால வவுனியாக்கார உல்லாச எம்.பி. செய்யிற ஒவ்வொரு தில்லாலங்கடி வேலையையும் மேலிடத்தின்ர காதில போட்டுக் கொண்டே இருக்கினமாம்.**

**இப்பிடியான உட்கட்சி குத்துவெட்டுகளாலதான் அந்தஎம்.பியின்ரை அந்தரங்கமான படங்களும் சிக்கி, அது பேஸ்புக்கில போடுப்பட்டு பெரும் பிரகண்டமாகி, எம்.பி வெளில தலைகாட்ட ஏலாதளவுக்கு நிலைமை வந்திட்டு. அதலாதான் அவர் தன்ர பேரைக் கெடுத்த அந்தப் பெடியனை ஆள் வைச்சு அடிச்சிருக்கிறார் எண்டு அங்கத்தைச் சனம் கதைக்குது.பட்சிக்கு ஒண்டும் தெரியாது பராபரமே!**




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து. ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவருக்கும் சமமான மரியாதையைத் தரக்கூடிய கும்ப ராசியினரே!

ஆழமாக யோசித்து அதிரடியாகச் செயற்படுவீர்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும் கேதுவும் என்ன பலன்களைத் தரப் போகிறார்கள் எனப் பார்ப்போம்.

இதுவரையிலும் உங்கள் ராசிக்கு ஏழாவது வீட்டில் நின்றுகொண்டு எதிலும் உங்களுக்கு ஈடுபாடு ஏற்படாதவாறு முடக்கிவைத்திருந்தார் ராகு. தாழ்வு மனப்பான்மையையும், மன உளைச்சலையும், வீண் கவலைகளையும் தந்துகொண்டிருந்தார்.

இப்போது அவர் ராசிக்கு ஆறாமிடத்தில் வந்து அமர்கிறார். ஆகவே, எதிலும் முன்னேறவைப்பார். சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்றுசேர்வார்கள்.

குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் சண்டை சச்சரவுகள்தானே மிஞ்சியது? கவலை வேண்டாம். இனி குடும்பத்தில் சந்தோஷம் பிறக்கும். மனைவி பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

வாழ்க்கைத் துணைவர் அடிக்கடி உடல்நலக்குறையால் அவதிப்பட்டாரே. இனி அவரின் ஆரோக்கியம் கூடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். வரவேண்டிய பணம் எல்லாம் வந்து சேரும். கடன் பிரச்னைகளில் ஒரு பகுதியைத் தீர்ப்பீர்கள்.

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் ராகு செல்வதால், பிரபலங்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களின் துணையைப் பயன்படுத்திக்கொள்வீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் பணப் பற்றாக்குறை நீங்கும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். வாழ்க்கைத் துணைவரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அவரின் உடல்நிலை சீராகும். வழக்குகள் சாதகமாகும்.

**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அஸ்வினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் வீண் பதற்றம், ஏமாற்றம், சிறுசிறு அவமானங்கள், வாகன விபத்துகள் வந்துபோகும். யாரையும் விமர்சித்துப் பேசாதீர்கள்.




**வியாபாரத்தில்:** மற்றவர்களின் ஆலோசனையால் இழந்தது கொஞ்சநஞ்சமில்லை. இனிப் பழைய தவறுகள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

**உத்தியோகத்தில்:** தொந்தரவு கொடுத்து வந்த மேலதிகாரி இனி கனிவாகப் பேசுவார். சக ஊழியர்களும் உங்களிடம் நட்புறவாடுவார்கள். இழந்த சலுகையை மீண்டும் பெறுவீர்கள். கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். கலைத்துறையினர் குறித்த வதந்திகள் மறையும். பெரிய நிறுவனங்களில் வாய்ப்பு கிடைக்கும்.

இதுவரை உங்களின் ராசியிலேயே அமர்ந்து உடல் சோர்வு, காரியத்தடைகள், மனஉளைச்சல், விரக்தி மற்றும் சோம்பலைக் கொடுத்து வந்தார் கேது. இப்போது 12இல் சென்று அமர்கிறார். உங்கள் பேச்சில் இனித் தெளிவு பிறக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அடிக்கடி கோபப்பட்டு வீண் வம்பில் சிக்கிக் கொண்டீர்களே... இனி சாந்தமாகப் பேசும் அளவுக்குப் பக்குவப்படுவீர்கள். சகல காரியங்களிலும் ஆர்வம் பிறக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும்.

மகிழ்ச்சிக்குக் குறையிருக்காது. சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீரும். கோழித் தூக்கம் போட்ட நிலை மாறும்; நிம்மதியான தூக்கம் வாய்க்கும். உடலில் நீர் சேர்ந்து அவதிப்பட்ட நிலை மாறும் . எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் குழந்தையில்லாதவர்களுக்குப் பிள்ளை பாக்கியம் உண்டாகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். கண், காது வலிக்கும்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் உங்களின் புகழ், செல்வாக்குக் கூடும். எடுத்த வேலைகளை கொஞ்சம் போராடித்தான் முடிக்க வேண்டி வரும். மறைமுக எதிரிகளிடம் கொஞ்சம் கவனமாக இருங்கள்.


**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் சகோதர வகையில் மனஸ்தாபங்கள், அலைச்சல் வரக் கூடும். அவருடன் வீண்விவாதம் வேண்டாமே.

உத்தியோகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுவீர்கள். அலுவலகப் பிரச்சினைகள் நீங்கி நிம்மதி பிறக்கும். நீங்கள் விருப்பப்பட்ட இடத்துக்கே இடமாற்றம் உண்டு.

## மனமாற்றமே ஒப்புரவின் அடித்தளம்

"தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்"

ஆணவம் கொண்டவர்கள் செபிக்கும்போது தன்னை மையப்படுத்தி தற்பெருமையடைவர். தாழ்ச்சி கொண்டவர்கள் கடவுளை முதன்மைப்படுத்தி திறந்த இதயத்துடன் தமது குற்றங்குறைகளுடன் அவரிடம் சரணடைவர். கடவுள் சுய ஆய்வுடன் கூடிய உள்ளார்ந்த மனமாற்றத்தையே விரும்புகிறார். மனம்மாறத் துடிக்கும் பாவிகளையே கடவுளின் அன்பு தேடிச்சென்று மீட்பை அருளுகின்றது.




பரிசேயனின் செபவேண்டலில் தற்பெருமை மேலோங்கி நிற்கிறது. 'அந்த வரிதண்டுபவர்போல் நான் இல்லை' என்று வேண்டுதல் செய்யும் போது இறைவன் இரக்கத்தை மறுத்து விடுகிறார்.

எனவே அவரது நற்செயல்கள் கூட இறைவன் முன்னிலையில் வலுவிழந்து போயிற்று. ஆனால் பாவியாக சமூகத்தால் கணிக்கப்பட்ட வரிதண்டுபவர், "கடவுளே பாவியான என்மீது இரங்கியருளும்" என்ற தாழ்நிலையுடன் இறைஇரக்கத்தை இறைஞ்சும் போது அவரது தகுதியின்மைகூட தகுதியாக மாறிவிடுகிறது.

வெளிவேடத்தையல்ல உள்ளத்தின் அழகை மதிப்பவரே இறைவன். நாம் அவரிடம் சரணடையும்போது மன்னிப்பு மழையில் நனைந்து மகிழ்ந்திடுவோம். தாழ்ச்சியான உள்ளமே இறைவன் விருப்பி நுழையும் இல்லம். மனமாற்றமே உருமாற்றத்தின் அடித்தளம்.

**யே.சுபீட்சன்,** கொழும்புத்துறை

# அரசியல் தீர்வு கிடைக்கும்வரை இடைக்கால நிர்வாகம் அவசியம்

## சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 31

காணிப்பறிப்பு அதிகாரங்களைக் கையாள்வதற்கும், புலம்பெயர்ந்தோர் முதலீட்டைக் கொண்டு வருவதற்கும் அரசியல் தீர்வு கிடைக்கும்வரை, இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படல் வேண்டும். இதற்கு அனைத்து அரசியல் சக்திகளும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அதன் இணைப்பாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவிக்கையில்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையே பேச்சு இடம்பெற்றது. அரசாங்கம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவே பேச்சுக்கு வந்தது.

சம்பந்தன் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கேட்டிருக்கின்றார். ஆனால், நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு 13ஆவது திருத்தத்தை திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்துங்கள் எனக் கேட்பதே பொருத்தமானதாக இருக்கும். தமிழ் மக்கள் சந்திக்கின்ற அரசியல்கைதிகள் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணிப்பறிப்பு பிரச்சினை பற்றியும் உத்தரவாதம் வழங்கப்பட்டிருப்பதாக சுமந்திரன் கூறுகின்றார்.

அரசியல் கைதிகள் பிரச்சினையை இழுத்தடிப்பதற்கு எந்தக் காரணமும் தேவையற்றது. அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் உடனடியாக அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை கூட்டமைப்பினர் அழுத்தமாக முன்வைத்திருக்க வேண்டும்.

போர் முடிந்தவுடன் நல்லிணக்கத்துக்குச் செல்வதற்கு முதல் ஆற்றுகின்றபணி அரசியல் கைதிகளை விடுவிப்பதுதான். ஆனால் 10 வருடங்களாகியும் இந்தச் செயற்பாடு இடம்பெறவில்லை. சாவுத் தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவை விடுதலை செய்த ஜனாதிபதிக்கு இது பெரிய காரியமல்ல.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் தெளிவான உரையாடல் இடம்பெறவில்லை. மேலோட்டமான உரையாடலே இடம்பெற்றது.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகம் பரிந்துரை செய்த நிலைமாறுகால நீதி நடைமுறைப்படுத்தப்படல்வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கவேண்டும். இது போதுமானளவு இடம் பெறவில்லை. காணிப்பறிப்புத் தொடர்பாக கண்காணிப்புடன் கூடிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். அது பற்றியும் பேசப்படவில்லை -என்றார். (ம-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோல் விலை அதிகரிப்பால் வெளிக்கள உத்தியோகத்தர் பாதிப்பு



சாவகச்சேரி,மார்ச் 31

பெற்றோல் விலை அதிகரிப்பால் அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

தினமும் கடமை நிமித்தம் தமது சொந்த மோட்டார் சைக்கிளில் செல்வோர், பெற்றோலின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் எரிபொருளுக்கான கொடுப்பனவை மூன்று மடங்காக செலவிட வேண்டியுள்ளது.

திணைக்களங்களால் 350 கிலோ மீற்றர் தூரப் பயணத்துக்கு மட்டும் ஆயிரத்து 750 ரூபா மாதாந்த பயணப் படியாக வழங்கப்படுகின்றது.

தற்போது பொருள்களின் விலை என்றுமில்லாத அளவு அதிகரித்து வருகின்றது. இதனால் நாளாந்த வாழ்க்கைச் செலவுக்கு தமக்கு வழங்கப்படும் வேதனம் போதாமல் உள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4,9)

# வரிசைகளால் வருந்துகிறேன்



## நீலிக்கண்ணீர் வடிக்கும் சமல் ராஜபக்ச

**கொழும்பு, மார்ச் 31**

**மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு நான் வருத்தமடைகிறேன் என நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் வரிசையில் நிற்பது வருத்தமளிக்கின்றது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பதவி விலகுவதில் அர்த்தமில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே தேவை. பிரச்சினைகளை மக்கள் நன்கு அறிந்திருந்த போதிலும் அதற்கு அரசாங்கம் வழங்கும் பதில்கள் போதுமானதாக இல்லை - என்றார். (ம)

## புலிகளுக்கு நிதியுதவி

## ஆறு பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, மார்ச் 31

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கிய வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 6 பேர் மீது இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளது.

இந்தியா மற்றும் இலங்கையில் புலிகளின் நடவடிக்கைகளை மீண்டும் ஒருங்கிணைத்துப் புதுப்பிக்கும் முயற்சியில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, செயலற்ற வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் செயற்பட்டனர் என்று அவர்களுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம)



## எல்லை தாண்டி மீன்பிடி இலங்கை மீனவர் கைது

சென்னை, மார்ச் 31

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், இலங்கை மீனவர் ஒருவர், இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டார்.

நாகை மாவட்டம் கோடியக்கரை படகுத் துறைமுகத்தில் இருந்து 14 நாட்டிக்கல் மைல் தொலைவில் கப்பலில் சென்று கடலோரப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர், கண்ணாடி இழைப் படகு ஒன்றைச் சோதனை செய்தனர்.

குறித்த படகு இலங்கை நாட்டைச் சேர்ந்தது. அதில் வந்தவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்தது.

இதையடுத்து படகைக் கைப்பற்றி மீனவரையும் கைது செய்தனர்.

மீனவரையும், கைப்பற்றிய படகையும் நாகை மாவட்டம் வேதாரண்யம் கடலோரப் பாதுகாப்பு குழும ஆய்வாளரிடம் ஒப்படைத்தனர். (ஒ-4,56)

## டொலரின் பெறுமதி 450 ரூபாவை எட்டும்

கொழும்பு,மார்ச் 31

டொலரின் பெறுமதி 450 ரூபாவை எட்டக்கூடும் என்று வடமேல் மாகாணப் பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்விகள் பீடத்தின் முதுநிலைப் பேராசிரியர் அமிந்த மெத்சிலா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வீதிகள் நிர்மாணம் உள்ளிட்ட உசிதமற்ற கருத்திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம், அரசியல் இலாபம் ஈட்டிக்கொள்ள எண்ணியிருந்தது.

அரசாங்கம் சவாலை வெற்றி கொள்வதற்கான பயனுறுதி வாய்ந்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்வைப்பதற்குப் பதிலாக, சர்வகட்சி மாநாட்டில் கொரோனா, மற்றும் ரஷ்ய - உக்ரைன் போரை தமது பொருளாதார நெருக்கடிக்குக் காரணங்களாகக் கூறியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,ரி1)



## பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு சீனாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசி

கொழும்பு,மார்ச் 31

பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு, சீனாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் 2 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி, இரண்டு வாரங்களில் பகிர்ந்தளிக்கப்படும் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் போது அரசாங்கம் சீனாவிடமிருந்து 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் புதிய கடனைக் கோரியுள்ளது. சீனா ஏற்கனவே இலங்கைக்கு 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்கியுள்ளது.

தற்போது இறக்குமதி செய்யப்படும் அரிசியின் பெறுமதி 2.5 மில்லியன் அமரிக்க டொலராகும் என்று சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த களைகொல்லி கைப்பற்றல்

சென்னை,மார்ச் 31

இலங்கைக்குக் கடத்த இருந்த களைகொல்லிப் பூச்சி மருந்து ஒரு தொகை, கியு பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் கியூ பிரிவு பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். இதன்போது ஒரு வள்ளத்துக்கு வாகனத்தில் இருந்து மூடைகள் ஏற்றப்பட்டுக் கொண்டு இருப்பதை கண்டு, அவர்களைச் சுற்றி வளைக்க முற்பட்ட போது சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளனர்.

அங்கிருந்த வாகனத்தைச் சோதனையிட்ட போது, அதில் சுமார் 700 லீற்றர் களைகொல்லிப் பூச்சி மருந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. (ஒ-4,56)

## ரயில் சாரதிகளின் போராட்டம் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 31

ரயில் இயந்திர சாரதிகளின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில் இயந்திர சாரதிகள் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.

ரயில் கட்டணத்தை தன்னிச்சையாக திருத்தும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மேலதிக நேர சேவையை கைவிடுவதற்கு இயந்திர சாரதிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ரயில் இயந்திர சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்தார். (ம)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 27,000 ஏக்கரில் சிறுபோகம்

கிளிநொச்சி,மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரணைமடு நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல், இரணைமடுக் குளம் சம்மேளனத்தின் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இரணைமடுக் குளத்தின் கீழ் இம்முறை சேதனப்பசளையைப் பயன்படுத்தி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இம்முறை இரணைமடு குளத்தின் கீழ் 15 ஆயிரத்து 750 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும். அதேவேளை 500 ஏக்கரில் மாற்றுப் பயிர்ச்செய்கையும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தியே மின்சார நெருக்கடிக்குத் தீர்வு

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 31**

**தற்போதைய மின்சார நெருக்கடியைத் தீர்க்க, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைத் தவிர வேறு வழியில்லை என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித் குமாரசிங்க தெரிவித்தார்.**



அலரிமாளிகையில் நடைபெற்ற பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஓர் அலகு மின் சாரத்துக்கு 60 ரூபாவுக்கு மேல் செலவாகும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஓர் அலகு மின்சாரம் குறைந்த பட்சம் 20 ரூபாவுக்குக் கிடைக்கும். 2030ஆம் ஆண்டின் தேவைக்கு ஏற்ப, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள மின்சார சபையின் சட்டத்தைத் திருத்தி தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பிரதான விநியோகத்துடன் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டு வருகின்றன என்றும் சுட்டிக்காட்டினர்.

தற்போதைய மின் நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும். மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தடையில்லா மின்சாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையின் 22 மில்லியன் சனத்தொகையில் சுமார் 6 மில்லியன் மக்கள் சமுர்த்தி சலுகைகளைப் பெறுகின்றனர். இதற்காக மாதாந்தம் சுமார் 62 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகத் தெரியவந்துள்ளது. சமுர்த்தி பெற வேண்டியவர்களுக்கு உண்மையில் சலுகைகள் கிடைக்கவில்லை எனவும் தேவையில்லாதவர்கள் சமுர்த்தி பெறுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-4,இ)

---

*மன்னாரில்*

# 1,200 குடும்பங்களுக்கு உதவி வழங்க ஏற்பாடு

மன்னார், மார்ச் 31

மன்னாரில் பொருண்மியம் நலிந்த ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்க மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, விலை உயர்வு என்பனவற்றால் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யும்முகமாகவே மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கமைய அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதும் மொத்த வியாபார நிலையங்களில் பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதால் இந்த உதவிகளை வழங்கத் தாமதம் ஏற்படுகின்றது என்று மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறடோ தெரிவித்துள்ளார். (ம-14,213)

---

# என்.வி.கியூ கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் என்.வி.கியூ 4, கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் என்.வி.கியூ 3 ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். என்.வி.கியூ 4 கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. சாதாரண பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாட சித்தி, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாட சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் என்.வி.கியூ 3 கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்.

கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாகக் கற்பிக்கப்படும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

---

# கட்டாக்காலி கால்நடைகளை கையகப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை வீதிகளில் நடமாடவிடாது வீடு களில் கட்டி வைத்திருக்க வேண்டும். எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் வீதிகளில் நடமாத்திரியும் கால்நடைகள் கையகப்படுத்தப்படுவதுடன், மா நகர சட்டளைச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

யாழ். மாநகரசபையானது மிகவும் குடிசன அடர்த்தி கூடியதும் அதிகளவான அரச, வர்த்தக நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேச முமாகும். அத்துடன் அதிகளவான வாகனங்கள் உள்வந்து வெளிச்செல்லும் பிரதேச மாகும். அதிகளவான மக்கள் வீதிகளில் பயணம் செய்யும்போது கட்டாகாலிக் கால்நடைகள் வீதிகளில் உலாவித் திரிவதால் கூடுதலான விபத்துக்களும், உயிர் இழப்புக்களும், அங்கவீனங்களும் ஏற்படுகின்றன. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் உட்பட பல உயர்தரப்புக்களாலும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மாநகரத்தின் சுகாதாரம், வீதிப்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு, கட்டாக்காலிக் கால்நடை களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம-4,இ)



இலங்கையிலுள்ள பங்களாதேஷ் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பங்களாதேஷின் 51ஆவது சுதந்திர மற்றும் தேசிய தின நிகழ்வுகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் கடந்த 26ஆம் திகதி இடம்பெற்றது. (ய)

---

# பிரதேசசபை உறுப்பினருக்கு அஞ்சலி

சாவகச்சேரி, மார்ச் 31

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் அமரர் வல்லிபுரம் சிவகுணசோதிக்கு கடந்த திங்கட்கிழமை பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்ற சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்த சபை அமர்வின் போதே அவருக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-14-159)

---

# எரிபொருள் இன்மையால் கடற்றொழில் பாதிப்பு!

மன்னார், மார்ச் 31

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்புடைய கருவாடு உற்பத்தி என்பன பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன.

மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்காமையால், மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடி இன்மையால் மீன்களின் விலை அதிகரித்துள்ளது. அதனால் கருவாடு உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கருவாடுகளின் விலையும் அதிகரித்துள்ளது.



கடந்த மாதம் 900 ரூபா விற்பனை செய்யப்பட்ட நெத்தலிக் கருவாடு தற்போது ஆயிரத்து 150 ரூபாவாகவும், ஆயிரத்து 100 ரூபா விற்பனை செய்யப்பட்ட சுட்டா கருவாடு ஆயிரத்து 350 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ம-4-213-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## விதைப்பதே அறுவடை!

விவசாயி ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதைகள் கற் பாறையில் விழுந்தன. அந்த விதைகளால் என்ன பயன்? எதுவுமில்லை. இன்னும் சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அந்தப் பயிர்கள் செழித்து வளர்ந்தன. நல்ல நிலத்தில் விழுந்த விதைகளால் விவசாயிக்கும் பெரும் இலாபம் உண்டானது. எமது செயல்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பாறை மீது விழுந்த விதையாக இருந்துவிடக்கூடாது. அவை நல்ல நிலத்தில் விழுந்த விதைகளாக இருந்தால் மட்டும்தான் நாம் அதற்கேற்ற பிரதிபலனை எதிர்பார்க்கலாம். இலங்கை அரசாங்கம் இப்போது கற்றுக்கொள்ள வேண்டிய பாடமும் இதுவே.

இலங்கையில் அநேக பகுதிகளில் நேற்றுமுதல் 10 மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாத பகுதிகளில்கூட நேற்று மின்வெட்டு நடைமுறையாகியிருக்கின்றது. அத்துடன் இந்த நடைமுறை அடுத்த சில நாள்களுக்குப் பின்பற்றப்படும் என்றும் நிலைமையைச் சமாளிக்க அரச அலுவலர்கள் வீடுகளில் இருந்தவாறு பணியாற்றும் முறைமை பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்திருக்கின்றது பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு.


எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியா 500 மில்லியன் கடனை இலங்கைக்கு வழங்கவிருந்த நிலையில், இந்த கடன்பெறுகை நடைமுறைப்படுத்தப்படும் முன்னரே 500 மில்லியன் டொலர் கடனை 750 மில்லியன் டொலர் கடனாக உயர்த்தும்படி கொழும்பு முன்வைத்த கோரிக்கையை புதுடில்லி ஏற்றிருக்கின்றது. எரிபொருள் என்ற ஒற்றைக்காரணிதான் இந்த இமாலய நெருக்கடிகளுக்கு முதன்மைக்காரணம். இலங்கை இப்போதெல்லாம் வாங்கிக்குவிக்கும் கடனில் பெருந்தொகை எரிபொருளை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. வினைத்திறனான நிர்வாகம் இருந்திருந்தால் இன்று இந்த இமாலய நெருக்கடியை பாதியாகக் குறைத்திருக்கலாம். அவ்வளவு ஏன் இந்த நெருக்கடிகளை இல்லாமலே செய்திருக்கலாம்.

இலங்கையொன்றும் பனிபொழியும் பூமியல்ல. வருடத்தின் முழு நாள்களும் சூரியன் உதயமாகும் தேசமிது. ஆனால், இந்தத் தேசத்தின் மின்கட்டமைப்பு எரிசக்தியை பெரும்பாலும் நம்பியதாகக் கட்டமைக்கப்பட்டிருப்பது எவ்வளவு பெரிய அபத்தம். சூரிய கலத்தை மையப்படுத்திய எரிசக்தியை மிகமிக இலகுவாக இங்கு கட்டமைத்திருக்கலாம். ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கும்போது அந்த நிறுவனத்துக்கான மின்தேவை அரச கட்மைப்புக்களில் தங்கியிராதபடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கலாம், வரையறுக்கப்பட்ட பணத்துக்கு மேலதிகமான செலவில் கட்டப்படும் வீடுகளுக்கான மின்தேவை சூரிய கலத்தை மையப்படுத்தியதாக இருக்குமாறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கலாம், இவ்வளவு ஏன் அரச திணைக்களங்களின் மின்தேவையில் சூரிய கலத்தை மையப்படுத்தி தன்னிறைவு கண்டிருக்கலாம். இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருளுக்கான கேள்வி குறைந்திருக்கும். அது இந்த நாட்டில் பாதிப்பிரச்சினைகள் இல்லாமல்போக வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கும். இதுபோன்றே காற்றாலை மூலமான மின்னுற்பத்தியிலும் இலங்கை பொருத்தமான பொறிமுறைகளைப் பின்பற்றி முழுமையாக ஈடுபட்டிருந்தால் இந்த மின்நெருக்கடி காணாமலே போயிருக்கும்.

என்ன செய்வது எம் அரசாங்கம் முழுவிதைகளையும் பாலைநிலத்திலும் கடும் பாறைகளிலும் அல்லவா விட்டெறிந்துள்ளது. நல்ல நிலத்தில் கோத்தாபய அரசாங்கம் ஒரு விதையைக்கூட தூவவில்லைப்போலும். பிறகெப்படி விளைச்சலை எதிர்பார்க்க முடியும்? காலம் பூராகவும் கைவிளக்கே கதியென்று இலங்கையர்கள் இருட்டில் இருக்கவேண்டியதுதான்.

### நாளொரு நல்வார்த்தை

"தவறை ஒப்புக்கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக்கொள்வதற்கான பலமும்தான் வெற்றிக்கான வழிகள்" - லெனின்




# மீனவர்கள் வரிசையில் நிற்கமுடியாது சங்கங்களுக்கு எரிபொருள் வழங்குக

## மன்னார் மீனவர்கள் கோரிக்கை

**மன்னார், மார்ச் 31**

**மன்னார் மாவட்டத்தில் இயங்கும் எரிபொருள் வழங்கும் நிலையங்கள் மீனவர்களுக்கான எரிபொருள்களை மீனவர் சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் முகம்மட் ஆலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் தட்டுப்பாட்டால், நீண்ட வரிசையில் நின்று எரிபொருள்களை மீனவர்களும் பொதுமக்களும் பெற்றுக் கொள்கின்றனர். வடபகுதிக்கு வருகின்ற எரிபொருள்களை சமமாகப் பங்கிட்டு ஒரு படகுக்கு இவ்வளவு தான் என்று முறையாக விநியோகிக்கும் போது, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் 33 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் கண்ணாடி இழைப்படகுகள் 3 ஆயிரத்து 500. ஒரு படகுக்கு கிட்டத்தட்ட 30 லீற்றர் எரிபொருள் தேவை.

எனவே எரிபொருள்களை சமமாகப் பங்கிட்டு வழங்கினால், மீனவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்க வேண்டிய தேவை இருக்காது.

மீனவர்களுக்கான எரிபொருள்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, அந்தச் சங்கங்களின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்குவது இலகுவாக இருக்கும்.

அதேவேளை இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன அல்லது வெற்றி அளிக்கவில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஊடாக இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று நம்பி இருந்தபோதும், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு வருடங்கள் கடந்தும் அதற்கான எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை - என்றார். (ஒ-4,213,60)

## சுவசெரிய திட்டம் வெற்றி

# ஜெய்சங்கர் – ஹர்ஷ மகிழ்ச்சிப் பகிர்வு!

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் 1990 சுவசெரிய சேவையை அறிமுகப்படுத்திய, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் இராஜகிரியவில் உள்ள '1990' தலைமையகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, இந்தியாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட '1990' நோயாளர் காவு வண்டிச் சேவையின் தற்போதைய நிலை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார். எதிர்காலத்தில் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் ஜெய்சங்கர், '1990' சுவசெரியவை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்கொண்ட அர்ப்பணிப்புக்காக விசேட நன்றியையும் தெரிவித்தார். (ம)

**நாளை** 01.04.2022 வெள்ளிக்கிழமை பங்குனி 18

சுபநேரம் : 06.11 - 07.41
ராகுகாலம்: 011.41 - 12.11

உலக முட்டாள் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி முதலீடுகள் இங்கு குவியாது

## கூட்டமைப்புச் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 31**

**தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற ஒரு தீர்வு வரும்வரைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் இங்கு முதலீட்டுக்கு வர மாட்டார்கள். புலம்பெயர் அமைப்புகளையும், தனிநபர்களையும் தடைசெய்து விட்டு அவர்களை வருமாறு அரசாங்கம் அழைப்பதில் அர்த்தமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.**

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:-

நான் சென்னைக்குச் சென்றபோது தமிழ்நாட்டின் நிதியமைச்சரோடு நீண்டபேச்சை நடத்தினேன். அதன் தொடர்ச்சியாக பல முன்னெடுப்புகள் தற்போது நடைபெறுகின்றன. அதிலொன்று தமிழ்நாட்டிலிருந்து வரும் முதலீட்டாளர்களையும் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களையும் இணைத்துக் கொண்டு வருகின்ற திட்டமும் இருக்கின்றது. அந்தப் பொறிமுறையொன்றை ஏற்படுத்த நாங்கள் முயல்கின்றோம். அதிலே நேரடியாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பாத இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தினர் தமிழ்நாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து வர விரும்பினால் அதற்கான ஒரு வழியையும் நாங்கள் ஏற்படுத்துகின்றோம்.

ஆனால் இது எல்லாவற்றுக்கும் முன்னர் சர்வகட்சி மாநாட்டிலே இந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நான் சொன்ன ஒரேயொரு விடயம் இந்த நாட்டிலே தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற ஒரு தீர்வு வரும்வரைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் இங்கு முதலீட்டுக்கு வரமாட்டார்கள் என்பதே. புலம்பெயர்ந்த மக்கள் அமைப்புகளையும், தனிநபர்களையும் தடை செய்துவிட்டு அவர்களை வருமாறு அரசாங்கம் அழைப்பதில் அர்த்தமில்லை. ஆகையால் இந்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

வடமாகாணத்திலுள்ள மூன்று தீவுகளை உற்பத்தி செயற்பாடொன்றுக்காக இந்தியாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? என்ற ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர்,

இதனை நாங்கள் வரவேற்கின்றோம். நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். இந்தியத் திட்டங்கள், இந்திய முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு, கிழக்கில் வருவதை நாங்கள் முற்றுமுழுதாக வரவேற்கின்றோம். அது எங்களுக்குப் பலமாக இருக்கும். ஆகையினாலே இந்தியாவுக்கு இந்தத் திட்டங்கள் கொடுக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் - என்றார். (ம-150)



# இரும்பு திருட்டு; இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 31

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் இரும்புத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுதுமலை எச்சாட்டி வைரவர் ஆலயத்தின் இரும்பு கேற் மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவின் கம்பங்களையும் திருடிக் கொண்டு சென்ற நிலையிலேயே குறித்த இளைஞரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ஒ-14,125)



கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தில் தங்கியுள்ள முதியவர்களின் நலன்கருதி பயன்பாட்டுக்கென ரூ.80 ஆயிரம் பெறுமதியான சக்கர நாற்காலி மற்றும் கட்டில் ஆகியன கொழும்பு பல்கலைக்கழக முதலாம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களால் கடந்த 27ஆம் திகதி நிலைய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன. (ய-9)

# ஈ.ரி.எவ். அங்கத்தவரின் பிள்ளைகளுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், மார்ச் 31

2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் (ETF) பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 9 ஆயிரம் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பங்களை www.etfla.lk எனும் இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை பிராந்திய அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, மெஹெவர பியச, 19 ஆம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் பூரணமற்ற மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தக் காரணத்துக்காகவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# 4 தசாப்தங்களைக் கடந்தும் புனரமைக்கப்படாத பாலம்

## வீதிக்கு மட்டும் காப்பெற்

யாழ்ப்பாணம், மார்ச் 31


41 வருடங்கள் கடந்தும் கல்லுண்டாய்வெளி அராலிப் பாலத்தை புனரமைக்காமல் அதன் மீது காப்பெற் வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாலம் தொடர்ந்தும் சேதமடைந்த நிலையில் இருப்பதால் இதன் ஊடான பயணம் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது.

யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியின் புனரமைப்புப் பணிகள் 2019 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அதன் முதற்கட்ட புனரமைப்பாக யாழ்ப்பாணம் முதல் வட்டுக்கோட்டைச் சந்தி வரை காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு, குறித்த பகுதிக்கான புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து வருகின்றன.

யாழ்ப்பாணம் தொடக்கம் வட்டுக்கோட்டைச் சந்தி வரையிலான அனைத்து பாலங்களும் புனரமைக்கப்பட்ட நிலையில், கல்லுண்டாய்வெளி அராலிப்பாலம் புனரமைக்கப்படாது அதன்மீது காப்பெற் செப்பனிடப்பட்டுள்ளது. வழுக்கையாற்று நீர் கடலுடன் சங்கமிக்கும் பகுதியாகவும் இந்தப் பாலம் காணப்படுகின்றது.

இந்த வீதியால் இரவு நேரம் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே உரியமுறையில் பாலத்தை மீள்புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,125)



# வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பு மருந்து

சாவகச்சேரி, மார்ச் 31

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் இன்று தொடக்கம் ஒரு வாரத்துக்கு வரணிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்க்கு எதிராக தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

அதன்படி இன்று காலை 8.30 மணி தொடக்கம் வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கஜமுகன் சந்தி, சிமிழ் அம்மன் கோவிலடி, மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் ஆகியவற்றில் வழங்கப்படும்.

மேலும் தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் பற்றிய விவரம் முதல்நாள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் எனவும் 6 மாதத்துக்கு மேற்பட்ட வளர்ப்பு நாய்களை அந்தந்த நிலையங்களுக்குக் கொண்டு சென்று தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எழுதுமட்டுவாழ், கொடிகாமம் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தடுப்பூசி ஏற்றப்பட்ட வேளையில் தவறவிட்டோர் வரணிப் பிரதேசத்தில் தடுப்பூசி ஏற்றும் இடங்களுக்குத் தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு வந்துபெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உக்ரைனில் மோதல் முடிவுக்கு வருகிறது!

- நேட்டோவில் உக்ரைன் சேராது
- ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையலாம்
- டொன்பொஸுக்கு தன்னாட்சி
- படைகளை ரஷ்யா குறைக்கும்
- கிரீமியா தொடர்பில் மௌனம்
- அதிபர்கள் சந்திக்கவும் வாய்ப்பு

கீவ், மார்ச் 31

**ரஷ்யா, உக்ரைன் இடையே துருக்கியில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சில், சாதகமான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இரு நாடுகளும் முன்வைத்த நிபந்தனைகள் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக உக்ரைனில் இடம்பெற்ற மோதல் முடிவுக்குவர வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது.**

அமெரிக்கா தலைமையிலான நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முனைப்புக்களை மேற்கொண்டதை அடுத்து, அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று தெரிவித்து உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா கடந்த மாதம் 24ஆம் திகதி போர் தொடுத்தது. உக்ரைனின் மிகப்பெரும் வர்த்தக நகரான மரியுபோல் ரஷ்யப் படைகளால் சிதைக்கப்பட்டிருக்கின்றது. வேறு நகரங்களிலும் கணிசமான சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதையடுத்து உக்ரைன், ரஷ்ய அதிகாரிகளுக்கு இடையிலான உயர்மட்டப் பேச்சு துருக்கியில் இடம்பெற்றது. மூன்று கட்டங்களாக இடம்பெற்ற இந்தப் பேச்சில் தற்போது இதுவரை இல்லாத அளவுக்கு முன்னேற்றமும் உடன்பாடும் எட்டப்பட்டிருக்கின்றது.

பேச்சின்போது, நேட்டோவில் இணையமாட்டோம். எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவோம் என்று உக்ரைன் தெரிவித்தது. இதை ரஷ்யத் தரப்பு ஏற்றுக் கொண்டது. மேலும் உக்ரைன் தலைநகர் கீவ், செர்னிஹிவ் நகரில் படைகளைக் குறைக்கவும் ரஷ்யா ஒப்புக்கொண்டது. அதேநேரம் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் டொன்பொஸுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்க உக்ரைன் ஒப்புக்கொண்டுள்ளது.



2014ஆம் ஆண்டு ரஷ்யாவால் உக்ரைனிடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட கிரீமியா தொடர்பில் எந்தப் பேச்சும் இடம்பெறவில்லை. எல்லாம் சரியாக நடந்தால், உக்ரைனில் அமைதியைக் கொண்டுவருவதற்கான கடைசி நடவடிக்கையாக ரஷ்ய அதிபர் புடின், உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி இருவரும் நேருக்குநேர் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள். இந்தப் பேச்சு நேட்டோ அல்லாத நாடொன்றில் இடம்பெறும் என்று கருதப்படுகின்றது. ஆயினும் தற்போதைய பேச்சுக்கள் நேட்டோவில் அங்கம் வகிக்கும் துருக்கியில்தான் இடம்பெற்று வருகின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பேச்சுக்குப் பின்னர் ரஷ்ய பிரதிநிதி விளாடிமிர் மெடின்ஸ்கை கூறும்போது, "அடுத்த கட்டமாக ரஷ்ய, உக்ரைன் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவார்கள். இதில் முக்கிய உடன்படிக்கை கையெழுத்தாகும். அதன்பிறகு இரு நாடுகளின் அதிபர்கள் சந்திக்க வாய்ப்புள்ளது" என்றார். உக்ரைன் பிரதிநிதி டேவிட் கூறும்போது, "ரஷ்யா, உக்ரைன் அதிபர்கள் சந்தித்துப் பேசுவதற்கான சூழல் உருவாகியுள்ளது. உக்ரைனின் அமைதிக்கு துருக்கி உட்பட 8 நாடுகள் வாக்குறுதி அளிக்க கோரியுள்ளோம்" - என்றார். (ம)

## பெரும்பான்மையை இழந்தது இம்ரான்கான் அரசு

இஸ்லாமாபாத், மார்ச் 31

பாகிஸ்தானின் இம்ரான்கான் தலைமையிலான அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான்கான் அரசு மீது எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் நேற்று விவாதம் நடைபெற்றது.

இதில் எதிர்க்கட்சிகள் தங்களுக்கு இருக்கும் ஆதரவைக் காட்டும் விதமாக நேற்று இஸ்லாமாபாத்தில் பிரமாண்ட பேரணியை நடத்தினர்.

இந்நிலையில், இம்ரான்கான் அரசுக்கு ஆதரவளித்து வந்த எம். கி.எம் கட்சி ஆதரவை விலக்கிகொண்டுள்ளது.

எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக எம். கி.எம் கட்சி அறிவித்துள்ளது. இதனால் எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக உயர்ந்து இம்ரான்கான் அரசின் பலம் 164 ஆகக் குறைந்துள்ளது.

இதனையடுத்து பாகிஸ்தானில் பெரும்பான்மையை இழந்தது இம்ரான்கானின் அரசு. நம்பிக்கை வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பே இம்ரான் கான் அரசுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பெரும்பான்மையை இழந்துள்ளதால் இம்ரான்கான் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வார் என்று கூறப்படுகிறது. (ச-இ)

## விண்வெளி குடியிருப்பு சவுதியில் நிர்மாணம்

துபாய், மார்ச் 31

சவுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விண்வெளிக் குடியிருப்பு 2026ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சவுதி இளவரசின் கனவுத் திட்டமான 'ட்ரோஜெனா' எனப்படும் இந்த விண்வெளிக் குடியிருப்பு தபூக் மாகாணத்தில் அமைந்துள்ள நியோம் என்ற இடத்தில் அமைக்கப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 8 ஆயிரத்து 530 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுவரும் இந்தக் குடியிருப்பில் இரண்டு மைல் அகலத்துக்கு நன்னீர் ஏரி, பனிச்சறுக்கு, மலை முகடுகளில் வீடுகள் ஆகியவையும் கட்டப்படுகின்றன. (ச-இ)



## சேவல் சண்டைப் போட்டி; 20 பேர் சுட்டுக்கொலை

மெக்ஸிக்கோ, மார்ச் 31

சேவல் சண்டைப் போட்டி ஒன்றில் ஏற்பட்ட தகராறில் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் மெக்ஸிக்கோவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்ஸிக்கோ நாட்டின் மேற்கு மாநிலமான மைக்கோவாகனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கலகலப்பு கூடும். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். உங்கள் அருமை மற்றவர்களுக்குப் புரியும்படியாக நடப்பீர்கள்.

**இடபம்:** செயலில் வேகம் கூடும். சமூகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். கோபம் குறையும்.

**மிதுனம்:** உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாகப் பேசுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அழகும், இளமையும் கூடும். சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள்.

**கடகம்:** நீங்கள் எதிரியாக நினைத்த ஒருவர் உங்கள் நட்பை நாடிவருவார். அமைதியாக இருந்து திட்டமிட்ட விஷயங்களை முடிப்பீர்கள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். சுபநிகழ்வு நடக்கும். குடும்பத்தில் எதிர்பாராத சந்தோஷம் உண்டு. பயம் நீங்கும். அக்கம்பக்கத்தினர் கலகலப்பாக பேசி உதவி செய்வர்.

**கன்னி:** வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை யோசிப்பீர்கள். உங்களை நம்பி கொடுத்த செயலை சிறப்பாக செய்வீர்கள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்:** என்றைக்கோ செய்த முயற்சிக்கு இன்று நல்ல பயன் கிடைக்கும். கடமைகளில் மனஉறுதியுடன் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். நண்பர்கள் குடும்பத்தினர் இடையே நெருக்கம் உண்டாகும்.

**விருச்சிகம்:** செலவு குறைவதால் பணப்புழக்கம் கணிசமாக உயரும். இன்றைய நிகழ்வுகளும் சூழ்நிலையும் மனதை லேசாக்கும். எதிர்பாராத நபரின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உற்சாகமான நாள். சக பணியாளர்கள் உங்களுக்கு ஒத்துழைப்புத்தருவார்கள். பணியாளர்களுக்குப் பொறுப்புகூடும். மாற்றம் உண்டாகும்.

**மகரம்:** நடைமுறையைக் கற்றுக் கொள்வீர்கள். பொறுமை தேவை. உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். செல்வாக்கு உயரும். அதிகாரப் பதவியில் வீண்பகை வேண்டாம்.

**கும்பம்:** புதிய நண்பர்கள் அறிமுகமாவர். அவர்களிடம் கவனமாகப் பேசுங்கள். பொதுநலச் செயல்களில் ஈடுபடுவீர்கள். பாராட்டுக் கிடைக்கத் தாமதமாகும். நீங்கள் தேடிய பொருள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** நண்பர்கள் இடையே ஆரோக்கியமான விவாதங்கள் உண்டு. பேச்சு சாதகமாக முடியும். கடன்கள் வசூலாகும். உடல்நிலை மேம்படும். மேலதிகாரி உங்களை ஆதரிப்பார். யோகமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்க தொடர்ச்சிகள்....

### முறிகண்டியில்...

ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மதியம் இந்த விபத்து நடந்துள்ளது. முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கழிவகற்றும் உழவியந்திரத்துடன், அதே திசையில் பயணித்த சொகுசு பஸ் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

உழவியந்திரத்தைச் செலுத்தி வந்த, மணவாளன்பட்ட முறிப்பைச் சேர்ந்த ஜெயராம் பிரசாத் (வயது-35) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உழவியந்திரத்தில் பயணித்த மூவர் படுகாயமடைந்தனர். இவர்கள் மூவரும் சுகாதார சிற்றூழியர்களாவர்.

படுகாயமடைந்த மூவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்தோடு , உயிரிழந்தவரின் உடலும் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-19)

### பல வீடுகளில்....

சாட்டுக்களின் கீழ் நேற்று ஒருவர் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரிக்குளம், உக்குளாங்குளம், வைரவப்புளியங்குளம், குருமன்காடு, தோணிக்கல் ஆகிய இடங்களில் பட்டப் பகலில் பூட்டியிருந்த 5 வீடுகளில் திருட்டுக்கள் நடைபெற்றிருந்தன. சமையலறைப் புகைக்கூண்டு வழியாக உள்நுழைந்து நகைகள், பணம், கைபேசி, கமரா போன்ற பொருள்கள் திருடப்பட்டிருந்தன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன. முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 24 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். திருடப்பட்டிருந்த கைபேசி, கைக்கடிகாரம், கமரா, உருக்கப்பட்ட நகைகள் என்பன அந்த இளைஞரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் போதைப் பொருள் விற்பனை செய்தமை மற்றும் 5 திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-110)

### ஜெனரல்...

யத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவுஸ்திரேலியாவில் விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பம் அவுஸ்திரேலியா வாழ் தமிழர்களாலும், மனித உரிமை அமைப்புக்களாலும், அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுத் தாக்கல் தொடர்பாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான நியாயத்துக்காக செயற்றிட்டம், சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய மையம், மனித உரிமைகள் சட்ட அமையம் மற்றும் தமிழ் ஏதிலிகள் கழகம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்கள்.

போர்க்குற்றவாளிகளின் சொர்க்கபூமியாக அவுஸ்திரேலியா மாறிவிடக்கூடாது என மனித உரிமை அமைப்புக்கள் அந்த கூட்டுக்கோரிக்கையை விடுத்துள்ளன. கடந்த 4ஆம் திகதி தாங்கள் ஜெகத் ஜெயசூரியா தொடர்பாக மேற்கொண்ட முறைப்பாடுகளைக் கண்டுகொள்ளாமல் விட்டதுடன், அவரைத் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கு அனுமதித்தமைக்காக அவுஸ்திரேலியப் பொலிஸாரைக் கண்டித்துள்ள அவ்வமைப்புக்கள், பொலிஸாரின் அலட்சியம் தொடர்பாக ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் சட்டமா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அவுஸ்திரேலிய பொலிஸார், அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகம் ஆகியவற்றின் தவறான நடவடிக்கைகள் மீதும் விசாரணை நடத்த வேண்டும் என்று இந்த அமைப்புக்கள் கோரியுள்ளன. (அ-எ-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 12 - 1974



மறைவு 30 - 03 - 2022

## திரு.சிவகுரு சண்முகராசா

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சிவன்கோயிலடி சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிவகுரு சண்முகராசா நேற்று (30.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் திரு திருமதி சிவகுரு தங்கமணி தம்பதியரின் அருமைப் புதல்வனும், திரு திருமதி கணேசமூர்த்தி செல்வராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், லோஜினி அவர்களின் பாசமிகு கணவரும், கஜானன், கர்சனா, நிதர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, அமரர் சிவானந்தராஜா மற்றும் இராஜேஸ்வரி, சிவமலர், சிவகுமாரி, செல்வலட்சுமி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகரஞ்சினி, ரவீந்திரன், தமிழினி, சாந்தலிங்கம், வசந்தா, பாலச்சந்திரன், சிவகுமார், இராசசிறி, ஜெயராணி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(CS 19139) (4/6) 076 164 8361, 076 855 0279

# மரண அறிவித்தல்

மலர்வு 21 - 02 - 1952



உதிர்வு 30 - 03 - 2022

## மாணிக்கவாசகர் விஜயகுமார்

(உரிமையாளர்- செல்வராசா ஸ்ரோர்ஸ் உடுவில்)

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் விசுவத்தனை வீதி பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் விஜயகுமார் அவர்கள் நேற்று (30.03.2022) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, கந்தசாமி, மல்லிகாதேவி மற்றும் கமலாதேவி, சுசிலாதேவி, சிவகுமாரி, சிவசுந்தரமூர்த்தி (கனடா), ஜெயக்குமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற இரத்தினபாலசிங்கம் மற்றும் புஸ்பரதி, தியாகராசா, காலஞ்சென்றவர்களான தர்மராசா, பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன், மற்றும் தெய்வேந்திரம் (கனடா), பாலசரஸ்வதி (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விசுவத்தனை வீதி,
பண்ணாகம். (CS 19140) (4/6) தகவல் குடும்பத்தினர்

# வேலையாட்கள் தேவை

மல்லாகத்திலுள்ள ISCHI TECH (Computer shop) நிறுவனம் மற்றும் ABI HOTEL ற்கு தங்கியிருந்து வேலை (Managing) செய்யக்கூடிய ஆண் வேலையாள் ஒருவர் தேவை சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

வயது எல்லை (23- 40)

முன்னுரிமை
1- O/L படித்திருத்தல் (ஆகக் குறைந்தது).
2- கணினி அறிவு, CCTV கமரா பொருத்துதல்.
3- சிங்களம் பேச தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பில் : 076 737 9898, 077 697 0865

# UK இல் கல்வி வாய்ப்பு

- 13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்கு உடன் விசா வழங்கப்படும்.

Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK
• Medicine
• Engineering
• IT & Others

தொடர்புகளுக்கு :
Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280
Email : principal.croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 01 - 1982



மறைவு 29 - 03 - 2022

## திரு. கனகரட்ணம் கனிஸ்ரன்

பருத்தித்துறை புலோலி வடகிழக்கு, புலோலி சந்தா தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகரட்ணம் கனிஸ்டன் அவர்கள் நேற்றுமுன்தினம் (29.03.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம்-சரஸ்வதியின் அன்பு மகனும், உதயகுமார்-இராஜசோதியின் அன்பு மருமகனும், பிரியங்காவின் அன்புக் கணவரும், சகிலா, சதீஸ்குமார், தாரணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாஸ்கரன், வத்சலா, றாகுல், பிரகாஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சபீபன், அத்விக் செனோன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
பாரதி வீதி,
நாயன்மார்கட்டு (CS 19136) (4/6) 077 846 3558, 076 038 0135


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அநீதிக்கு எதிராக ஒன்றிணைக!

வவுனியா, மார்ச் 31

**யாழ்ப்பாணம் - மட்டுவிலில் பிரதமரின் வருகையின்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தாய்மாருக்கு எதிராக பொலிஸாரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அநீதிக்கு எதிராக, குரல்கொடுக்க அணி திரளுங்கள் என்று வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

எதிர்வரும் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பேரணி தொடர்பில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களுக்கு விளக்கமளித்தும் ஆதரவுகோரியும் கருத்துத் தெரிவிக்கையிலேயே சங்கத்தின் தலைவி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

பிரதமரின் வருகையை எதிர்த்து கண்டனப் பேரணியை நடத்துவதற்காக நாம் சென்றிருந்தபோது, எமது தாய்மார்மீது கண்மூடித்தனமான தாக்குதல் பொலிஸாரால் நடத்தப்பட்டது.

கொடூரப் போரையும், இன அழிப்பையும் மேற்கொண்ட இந்த அரசாங்கம் ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் இந்த நிலையில் வடக்கு- கிழக்குக்கு எங்களுடைய பெறுமதிமிக்க பிள்ளைகளின், எங்களுடைய உறவுகளின் குருதியில் கட்டப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக எவ்வாறு அவர்கள் இங்கு வரலாம்?

அவருடைய வருகை போலித்தனமான வருகை. அவர் இங்கு வந்ததற்கான காரணம் எமது பகுதிகளில் நில ஆக்கிரமிப்பைச் செய்து, பௌத்த விகாரைகளை அமைத்து பௌத்தத்தை பரப்புவதற்காக வேயாகும்.

எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் என்ன ஆனார்கள்? என இந்த அரசாங்கம் கூறமுடியாதபோது, எங்களுடைய பிள்ளைகள் தவழ்ந்து- நடந்து -திரிந்த மண்ணிலே வந்து நிகழ்வுகளை நடத்த என்ன தேவை ஏற்பட்டுள்ளது?.

எனவே நாம் அதனை எதிர்த்தோம்.

உண்மைக்கும் நீதிக்குமாக போராடும் எம் தாய்மாருக்காக நடந்த அநீதியைக் கண்டித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து முற்றவெளி மைதானம் வரையும் கண்டனப் பேரணியை நடத்தவுள்ளோம்.

எனவே ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருக்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள் உட்பட அனைத்து பொது அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு அநீதிக்கு எதிராக குரல் கொடுக்குமாறு அழைக்கின்றோம் -என்றார். (ம-4-110)

## கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 31

கொடிகாமம், போக்கட்டி அ.த.க. பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.சிவகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## கசிப்புடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 31

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மத்தியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 21 வயதான இளைஞர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வீடொன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய சந்தேகநபரிடமிருந்து 5 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. (ஒ-14-125)

## நாடகப் பயிற்சிப்பட்டறை

சாவகச்சேரி, மார்ச் 31


வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாடகக் கலைஞர்களுக்கான நாடகப் பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் 2ஆம் திகதி சனிக்கிழமை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி இராஜமல்லிகை சிவசுந்தர் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட நாடக அலகின் விரிவுரையாளர்கள் வளவாளர்களாகப் பங்குபற்றவுள்ளனர்.

இதில் மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களில் தெரிவுசெய்யப்பட்ட நாடகக் கலைஞர்களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## கர்ப்பிணிகளுக்கு பழுதடைந்த அரிசி

### பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு



மன்னார், மார்ச் 31

மன்னாரில் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட போசாக்கு உலர் உணவு பொதியில் பழுதடைந்த அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கர்ப்பிணிகள், போசாக்கு உலர் உணவுப் பொருள்களை மன்னார் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொண்டனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட பொதியில் பழுதடைந்த அரிசி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தில் சுகாதாரமற்ற முறையில் அரிசி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிக்கையில்;

கூட்டுறவுச் சங்கத்தில் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட போசாக்கு உலர் உணவுப் பொதியில் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

அதற்கமைவாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் களஞ்சியசாலையைப் பார்வையிட்டனர்.

அங்கு விநியோகிக்க தகுதியற்ற அரிசி இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

அதனையடுத்து அரிசி விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளது -என்றார். (ஒ-4-56)



## ‘செயற்பட்டு மகிழ்வோம்’ போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

வடமாகாண ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ‘செயற்பட்டு மகிழ்வோம்’ போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற போட்டியில் வடமாகாணத்தில் உள்ள 13 வலயங்களில் 39 அணிகள் கலந்துகொண்டன. மூன்று பிரிவாக நடத்தப்பட்ட போட்டிகளில் 39 அணிகளுடன் மோதி அனைத்திலும் முதலிடத்தை கிளிநொச்சி மாவட்டம் பெற்றுக்கொண்டது. (ஒ-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 . 09 . 1955



மறைவு
02 . 03 . 2022

கடந்த (02.03.2022) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் பொன்னுத்துரை சிறீகரன்

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரது மறைவுச்செய்தி அறிந்து நேரில் கலந்துகொண்டும், தொலை பேசி, முகநூல் வாயிலாகவும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகைகள், மலர்வளை யங்கள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி, ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். (cs.19123) (2.6)

குடும்பத்தினர்
077 774 3276

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
31 . 12 . 1960



மறைவு
31 . 03 . 2021

## திருமதி முருகதாஸ் சந்திரவதனா

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்விற்கும் உயர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாய் வழிகாட்டிச்சென்ற
குடும்பத்தின் குலவிளக்கே

அன்பு வழிகாட்டி
அறிவு ஒளியூட்டி

ஆறுதல்கள் உரைத்திடுவீர்
விருந்தோம்பல்கள் இனிதே செய்திடுவீர்
விந்தைமிகு செய்திகளை விளம்பிடுவீர்
மண்ணில் மறைந்தாலும் - அனைவர்
மனங்களிலும் நிறைந்துவிட்டீர்

பசுமையான உங்கள் நினைவுகளை
நெஞ்சினிலே சுமந்த வண்ணம்
விடையளிக்கின்றோம்
ஆண்டவன் காலடியில் இளைப்பாறுங்கள்

செட்டிச்சோலை
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(cs.19118) (2.6)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18.05.1953



உதிர்வு
24.03.2020

நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார்கோயிலடி
சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கதிரவேலு சிறீகரன்

(ஓய்வு நிலை கிராமசேவை அலுவலர்)

எம் அருமைக் கணவரே!
எம்மை இங்கே தவிக்கவிட்டு எங்கு சென்றீரோ!

வானடைந்து இரண்டு வருடம் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் ஆறாது...
நீங்கள் என்னைவிட்டு நீண்டதூரம் சென்றாலும்
உங்கள் ஆசைமுகம் என் நெஞ்சில் நிலைத்திருக்கும்...

உடன்பிறப்பே எங்கள் உயிர்ச் சகோதரரே!
எம்முடன் பிறந்தவரே எமதருமைச் சகோதரரே!
உங்களைத் தேடி எம் கண்கள் களைத்ததே...!

வானத்தை விட்டு நிலவையும் வாசத்தை விட்டு மலரையும்
பிரிக்க முடியாது - அதுபோல உங்கள் நினைவுகளை- எங்கள்
நெஞ்சை விட்டும் விலக்கமுடியாது
இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்களின் நினைவுகளோடு வாழ்ந்திடுவோம் நாங்கள்..!

பிள்ளையார் கோவிலடி,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.
076 268 9244
077 986 1406

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## கேள்வி அறிவித்தல் - 2022

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகள், ஆரியகுளம் பகுதியில் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுகளில் ஈடுபடுதல், விளம்பர ஒலிபரப்பு சேவைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் யாழ் மாநகரசபையில் விண்ணப்பபடிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் விபரத்தைக் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **21.04.2022** ம் திகதி மு.ப **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - **ரூபா 1,000.00**
கேள்விப் படிவம் விநியோகித்தல் - **01.04.2022 – 20.04.2022**
**(மு.ப 9.00 - பி.ப. 3.00 மணி வரை அலுவலக நாட்களில்)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - **21.04.2022 மு.ப 10.00 மணி வரை**

கேள்வி திறத்தல் - **21.04.2022 மு.ப. 10.00 மணிக்கு**

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கக் கூடிய பிணைவைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | பழையபூங்கா சிற்றுண்டிச்சாலை | 363,898.26 | 5,000.00 | 1 வருடம் |
| 02 | ஆரிய குளம் பகுதியில் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் | 100,000.00 | 5,000.00 | 1 வருடம் |
| 03 | விளம்பர ஒலிபரப்புச் சேவை (செங்குந்தா மீன் சந்தைக்கு மேல்) | 300,000.00 | 5000.00 | 1 வருடம் |
| 04 | விளம்பர ஒலிபரப்புச் சேவை (நவீன சந்தைக் கட்டிடத்தொகுதி) | 1,000,000.00 | 10,000.00 | 2 வருடம் |
| 05 | பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000,000.00 | 20,000.00 | 2 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல 021 221 5978)

முதல்வர்
யாழ் மாநகர சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து




எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றிவரும்

**திரு.சு.திருநாவுக்கரசு (SLPS - I)**

**இன்று (31.03.2022) வியாழக்கிழமை**

**தனது 60 ஆவது அகவையில் காலடி எடுத்துவைக்கின்றார்**

இவரை வாழ்த்துவதோடு இவருடைய பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்

வாழ்த்துவோர்:
**பழைய மாணவர் சங்கம்**
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்-உரும்பிராய்

cs 43870(2.6)

## நாஹறா மருத்துவ நிலையம்

தீராத கை, கால் விறைப்பு, பாரிசவாதம், அல்சர், மூழங்கால் எலும்பு தேய்வு, தீராதபுண்கள், தீவிர குருதி அழுக்கம் சிறப்பு மருந்தியலில் குணப்படல்

**T.P.: 077 321 2740**

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (கைதடிசிடு) மானிப்பாய்.

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி, 8ஆம் திகதி சர்ப்ப வாகனக் காட்சியும், 9ஆம் திகதி சப்பறத்திரு விழாவும், 10ஆம் திகதி மாலை 4 மணிக்கு இரதோற்சவத் திருவிழாவும், 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-14)

# மணிவிழா வாழ்த்து




எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றிவரும்

**திரு.சு.திருநாவுக்கரசு (SLPS - I)**

**இன்று (31.03.2022) வியாழக்கிழமை**

**தனது 60 ஆவது பிறந்ததினத்தில் காலடி எடுத்துவைக்கின்றார்**

இவரை வாழ்த்துவதோடு இவருடைய பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்-உரும்பிராய்

cs 43872(2.6)

## நல்லூர் பிரதேசசபை
## பகிரங்க அறிவித்தல்
## சந்தைக் கழிவு முறைமையை முற்றாக நீக்குதல் தொடர்பானது

நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட திருநெல்வேலி பொது சந்தையில் விவசாய உற்பத்தி பொருட்களுக்கான 10% கழிவு முறைமையினை முற்றாக நீக்கும் பொருட்டு எதிர்வரும் 2022.04.02 ஆம் திகதி முதல் உற்பத்தியாளர்களால் விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப் பொருட்கள் கூறல் அடிப்படையில் விலை தீர்மானிக்கப்பட்டு அதற்கான பெறுமதி அனுமதிக்கப்பட்ட சந்தை குத்தகைதாரரின் ஊடாக கொள்வனவு செய்யும் வியாபாரிகளால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். என்பதுடன் குத்தகைதாரருக்குரிய 4% கட்டணம் உற்பத்தியாளர்களால் குத்தகைதாரருக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் உரிய நிறைக்கு கூறப்படும் விலை விகிதங்களுடன் குத்தகைதாரால் பற்றுச்சீட்டு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இந்த நடைமுறையினை ஏற்று உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் தொடர்புபட்ட பொதுமக்கள் பிரதேசசபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு.ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை**

DAV உதயன் தமிழ் 99.5 99.7 ஊடக அனுசரணையில்

உலக நிகழ்ச்சி தயாரிப்பாளர் பிரசாத் பெருமையுடன் வழங்கும்

HARI ENGINEERING இன்

"காற்றினில் வரும் கீதம்..."
சூப்பர் சிங்கர் இசைநிகழ்ச்சி




2nd ஏப்ரல் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு - குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம்,நெல்லியடி
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=, 500/=,300/= [300 ரூபா டிக்கெட் பெறுபவர்களுக்கு ஆசன வசதி இல்லை]
3nd ஏப்ரல் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா மண்டபம்
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=, 500/= நுழைவுச்சீட்டுகளுக்கு - 0741837707

Main Sponsor
HARI ENGINEERING
Alvai Road, Nelliyady, Jaffna.
Tel: 0212261400 / 0772830694

அருள் ஜுவல்லறி
09, New Municipal Complex, Kasthuriyar Road, Jaffna.
Tel: 0741837707

Arrul Global Express
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Tel:0212223536

V.S.P Gingelly Oil
Parimala Stores
26, A, Manipay Road, Jaffna.
Tel: 0212224135
Tel: 0212229165

Banquet Hall
K.K.S Road, Maruthanar Madam, Chunnakam, Jaffna.
Tel: 0212243536/ 0776529583

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
Tel: 0777225292

VEGILAND

IDMNC INTERNATIONAL

Press Partner | Hospitality Partner | Service Partner

Saravana Digital Print 0775631562

The Valampuri
Valampuri Hotel

Event Partner & Organizer

BSDW
Beauty sketch Dream World
Beauty Cosmetology institution & Mr & Mrs modeling Academy
+94771543899

The Phone Shop- Nelliyadi Tel: 0772850285
kajamugan Hardware Tel:02122228333
Rajan Cycle Works Tel:0775552973

டிக்கெட் கிடைக்கும் இடங்கள் கஸ்தூரியார் வீதி- Arul Jewellers (0741837707)
நெல்லியடி - The Phone Shop Tel: 0772850285
சுன்னாகம் - Ranjanas Tex Tel: 07777488201/0212240278
சாவகச்சேரி - V.M.K.Jewellers - Tel: 0773144756/ 0212270038
Arruls (Pvt) Ltd. (0741837707) (அனைத்துக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

K.T.Prasath Tel: 0774718969
Event Management - Ceylon Art Creation (CAC)

Ticket Hotline : 0741837707

## University of Jaffna, Sri LankaFaculty of Arts
## Walk- in- interview

Walk in Interview for the appointment to the Post of Temporary Assistant Lecturer/- Temporary Instructor will be held on 04th April 2022 in the Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna, in the following manner.

| | |
|---|---|
| Temporary Assistant Lecturer in Art & Design (Painting, Sculpture) | 9.30 am |
| Temporary Instructor in Art & Design (Painting, Sculpture) | 9.30 am |
| Temporary Assistant Lecturer in Music (Veena ,Vocal ,Miruthangam) | 10.45 am |

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/Temporary Instructor**

1. A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honors.

Or

2. A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honors.

Or

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least Second Class Honors and
   (b) A recognized postgraduate degree in the relevant subject.

4. Candidates who are awaiting results for the final degree examination may also be present.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (fixed) |
| Temporary Instructor | Rs. 40,920/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the abovementioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and ... place.

Registrar
University of Jaffna

(cr.37124) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வம் இரத்தினபூபதி



G.P.S. றோட் கல்வியங்காடு என்ற முகவரியைப் பிறப்பிடமாக வும். வதிவிடமாகவும் தற்போது கனடா Toronto வில் வசித்த வருமாமான திருமதி செல்வம் இரத்தினபூபதி 29.03.2022இல் இறைபதமெய்தினார்.

**தகவல்:**

**மகள்: திருமதி அண்ணாத்துரை சுப்புலட்சுமி**

**"லக்சுமி"**

**G.P.S.றோட்,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**
**021 223 0421, 077 766 7114**

(cs 43873)(2.6)

# விண்ணக வாழ்வின் பதினான்காம் வருட நினைவஞ்சலி



பிறப்பு 20.06.1938

இறப்பு 31.03.2008

## அமரர் சுப்பிரமணியம் யோசேப்பூராசா

(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், முன்னாள் இயக்குநர் புனித அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லம்)

**"சீவியத்தில் நேசித்தோம்**
**மரணத்திலும் உமை மறவோம்"**

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

**புங்குடுதீவு - 02**

(cs.43847)(2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 • 04 • 1940



ஆண்டவன் அடியில் 11 • 04 • 2021

## அமரர் செல்லையா சிவராசா

நீங்காத நினைவுகள் தந்து
நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊரெல்லைத்தெரு,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

நித்தம் உங்கள் நினைவுகளோடு
**குடும்பத்தினர்**

(cs.43855) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



## நல்லதம்பி பேரின்பநாதன்

(முன்னாள் துறைத் தலைவர், பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முன்னாள் துறைத் தலைவரும் சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய நல்லதம்பி பேரின்பநாதன் அவர்கள் 24.03.2022 வியாழக்கிழமை அன்று கனடா வில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதா பங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்**
**மற்றும் மாணவர்கள்**

**பொருளியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(cs 43875) (2.6)

## இத்தியடி விநாயகர் பெருந்திருவிழா

சங்கத்தானை, இத்தியடி வீரகத்தி விநாயகர் கோயில் பெருந்திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் ஏப்ரல் 15 ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஓ-14,9)

# பணிப்பெண் தேவை

கொக்குவில் பகுதியில் வீட்டில் தங்கியிருந்து முதிய பெண்மணியைப் பராமரித்து உணவு சமைக்கக் கூடிய 45 வயதுக்குட்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை.

**077 602 0394**

(cs43876) (2.6)

# சமையலாளர் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு தங்கி நின்று சமையல் வேலை செய்வதற்கு வேலையாள்கள் (இருபாலாரும்) தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**076 523 9123, 077 979 7418**

(cs 19132)(2.6)

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கான கோரல் - 2022

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(I) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) , Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் அட்டவணையின் படி காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 31.03.2022 தொடக்கம் 20.04.2022 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 21.04.2022 ஆந் திகதி 11.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 21.04.2022 ஆம் திகதி 11.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் 08.04.2022 ஆம் திகதி 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2022/04/PSSP/B1/01 | Construction of Cycle & Motorbike Park at PMCU-Kiriibbanwewa | 0.842 | 66 Days | C9 and C8 (Building) | 9,000.00 | Till 07.07.2022 | 2,000.00 |
| NP/MU/2022/04/PSSP/B1/02 | Construction of Cycle & Motorbike Park at DH-Sampathnuwara. | 1.168 | 72 Days | C9 and C8 (Building) | 12,000.00 | Till 07.07.2022 | 2,000.00 |
| NP/MU/2022/04/PSSP/B1/03 | Construction of Cycle & Motorbike Park at DH-Mullaitivu. | 1.703 | 76 Days | C9 and C8 (Building) | 18,000.00 | Till 07.07.2022 | 2,000.00 |
| NP/MU/2022/04/PSSP/B1/04 | Internal Access Road to Incinerator BH Mankulam | 1.574 | 75 Days | C9 and C8 (Building) | 16,000.00 | Till 07.07.2022 | 2,000.00 |
| NP/MU/2022/04/PSSP/B1/05 | Renovation of MO Quarters at DH Sampathnuwara | 0.897 | 68 Days | C9 and C8 (Building) | 9,000.00 | Till 07.07.2022 | 2,000.00 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" dated 18.02.2021 and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு**

(in 17107) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு...
மாகாண அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட 9 மருத்துவமனைகளை மத்திய அரசின் கீழ் உள்வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் 4 மருத்துவமனைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த முயற்சிக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. மாகாண அரசின் அதிகாரங்களைப் பறிக்கும் நடவடிக்கை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடனான சந்திப்பின்போதும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, நாடு முழுவதும் அடையாளப்படுத்தப்பட்டிருந்த 9 மருத்துவமனைகளில் வடக்கு மாகாணத்தின் 4 மருத்துவமனைகள் தவிர்ந்து தென்பகுதியிலுள்ள 5 மருத்துவமனைகளில் 4 மருத்துவமனைகள் மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு, மத்திய அரசால் கேள்வி கோரலில் தெரிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவன ஊழியர்கள் நேற்று முன்தினம் கடமைக்கு சமுகமளித்தனர். இதேவேளை அங்கு ஏற்கனவே மாகாண நிர்வாகத்தால் கேள்வி கோரலில் தெரிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவன ஊழியர்களும் கடமையிலிருந்தனர்.

மாகாண நிர்வாகத்துக்கு எந்தவொரு முன்னறிவித்தலும் வழங்கப்படாமல் மத்திய அரசு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இதனையடுத்து, மாகாண மருத்துவமனைகளை சத்தம் சந்தடியில்லாமல், மாகாண நிர்வாகத்துக்கு அறிவிக்காமல் மத்திய அரசின் கீழ் உள்வாங்கியுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (அ-ஓ-5)

### இலங்கை...
றாக்குறை, அதனால் ஏற்பட்டுள்ள நீண்ட நேர மின்வெட்டு என்பவற்றால் இலங்கையின் நாளாந்தச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன என்றும், தொழில்துறைகள் பலத்த அடிவாங்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இன்று அரைநாளுக்கும் மேல் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் நிலையில், சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் 37ஆயிரம் தொன் எரிபொருளுடன் வந்துள்ள கப்பலில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு செலுத்தவேண்டிய 52 மில்லியன் டொலர் செலுத்தமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதே மின் தடை நேரம் அதிகரிக்கக் காரணம் என்று கூறியுள்ளார். மின்தடை நேரம் எதிர்வரும் நாள்களின் அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிழையான நேரத்தில் வரிச்சலுகைகளை வழங்கியதாலும், கொரோனாப் பெருந்தொற்றின் தாக்கத்தாலும், வரலாற்று ரீதியாக பலவீனமானதாக காணப்பட்ட அரசாங்கத்தின் நிதி நிலைமை என்பவற்றாலேயே இலங்கை இப்போது தத்தளிக்கின்றது என்று சுட்டிக்காட்டப்படும் நிலையில், "நீண்ட நேர மின்தடையால் நாடு இருளில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தாலும், பற்றாக்குறையாலும் மக்கள் வீதிகளில் அலைய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்தநிலையில், இந்த அரசு இனியும் தாமதிக்காமல் கூண்டோடு பதவி விலகவேண்டும்." என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

"நாடு வரலாறு காணாத நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இந்த அரசே முழுப்பொறுப்பு. தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் சார்ந்த தீர்வுகள் குறித்தும் நாம் பல தரப்புடனும் கலந்தாலோசித்து வருகின்றோம். இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் இலங்கை மீண்டெழ முடியாது. எனவே, இந்த அரசுகூண்டோடுபதவிவிலகவேண்டும். அப்போதுதான் ஆட்சியை நாம் பொறுப்பேற்க முடியும். எங்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு உடனடித் தீர்வுகள் இல்லாத நிலையில், இது எதிர்வரும் நாள்களில் இன்னும் தீவிரமடையும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்தியாவிடம் இருந்து கடனைப் பெற்று நிலைமையைச் சமாளித்தாலும் அது ஓரிரு வாரங்களுக்கான தீர்வு என்றே பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-எ-22)

### இன்று...
அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று அரைநாளுக்கும் மேலாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் எதிர்வரும் நாள்களில் இது அதிகரிக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அனல் மின் நிலையங்களுக்கான எரிபொருள் வழங்கப்படாததை அடுத்தே மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### எரிபொருள்...
ரும் போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது: இந்தியாவிடம் இருந்து கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் ஏப்ரல் 5ஆம் திகதி இலங்கையை வந்தடையும் .

நாட்டில் எரிபொருள் முற்றாகத் தீர்ந்துவிடாது என்றும், ஆயினும் தட்டுப்பாடு காணப்படும். பொதுமக்கள் இந்தக் காலப்பகுதியில் பொறுமையுடன் செயற்பட வேண்டும்- என்றார்.

அதேநேரம் ஆளும் பொதுஜன பெரமுனவின் பிறிதொரு அமைச்சரான ரோஹித அபேகுணவர்தன, நாட்டில் எரிபொருள் இல்லையென்று யாராவது கூறினால் அது அப்பட்டமான பொய் என்று கூறியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அரசாங்கத்தில் உள்ளவர்கள் நாட்டின் உண்மை நிலையை மறைத்து, தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைக்கவே முயன்று கொண்டிருக்கின்றனர் என்றும், அதனாலேயே நாடு இந்த நெருக்கடி நிலைமைக்குச் சென்றுள்ளது என்றும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-எ)

### பாடசாலை....
எதிர்வரும் முதலாம் திகதி முதல் சேவையில் ஈடுபடப் போவதில்லை என வட இலங்கை மாவட்டங்களுக்கு இடையிலான பாடசாலைப் போக்குவரத்துச் சேவைச் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுவரை அரசாங்கம் எந்த உதவிகளையும் வழங்காவிட்டாலும் பரீட்சை மற்றும் கல்வி தொடர்பாக அக்கறை காரணமாக போக்குவரத்துச் சேவையை வழங்கினோம் என்று தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் ஹரிச்சந்திர பத்மசிறி, வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தீர்வை முன்வைக்காவிட்டால், முதலாம் திகதி முதல் சேவையில் ஈடுபடுவது கடினம் என்று தெரிவித்துள்ளார். (அ-எ)

### எரிவாயு....
நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை வட மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் உள்ள வடக்குமாகாண கல்வித் திணைக்களத்தில் வைத்து எரிவாயு சிலிண்டர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அறிவுறுத்தலுக்கு அமைய ஊழியர்கள் தங்கள் வெற்று எரிவாயு சிலிண்டர்களை திணைக்களத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு ஒன்று பதிவாகியிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்ட அதிகாரிகள் திணைக்களத்துக்கு நேரில் சென்று எரிவாயு சிலிண்டர் விநியோகத்தைத் தடுத்து நிறுத்தினர். நாட்டில் தற்போது எரிவாயு சிலிண்டருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிவாயு சிலிண்டரைப் பெறுவதற்காக அதிகாலை முதல் இரவு வரையில் மக்கள் முகவர் நிலையங்களில் காத்திருக்கின்றனர். ஆயினும் எரிவாயு சிலிண்டர்கள் முகவர் நிலையங்களுக்கு கொண்டுவரப்படாது இடைநடுவில் கைமாற்றப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அரச திணைக்களங்களில் எரிவாயு விநியோகம் நடைபெறுகின்றது என்று தகவல்கள் முன்னர் வெளியான நிலையில், அவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் கோரியிருந்தார்.

ஆயினும் வடக்கு மாகாணத்தில் தற்போதும் பல திணைக்களங்களில் ஊழியர்களுக்கு எரிவாயு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-20)

### யாழில்...
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டீசலை மக்களுக்கு விநியோகிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ்ப்பாணம் மத்தடியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த டீசலே இவ்வாறு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆயினும் டீசல் மக்களுக்கு விநியோகிக்கப்பட வில்லை. மறுநாள் அதிகாலை டீசல் நிரப்பச் சென்றவர்களுக்கு, டீசல் முடிவடைந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் அங்கு திடீரென அதிகாரிகள் சோதனை நடத்தியபோதே, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் கண்டுபிடிக்கப்பட்டது என்றும், அதை மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு நேற்று அறிக்கையிட்டுள்ளனர். (அ-எ-9)

### 15 மணித்தியாலங்கள்...
மின்வெட்டு 15 மணித்தியாலங்கள்வரை அதிகரிக்கும் என்றும் மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்காலத்தில் மின்துண்டிப்பு நேர அட்டவணையை வெளியிடுவதை விடவும், மின் விநியோக நேர அட்டவணையை வெளியிடுவது இலகுவானதாக இருக்கும் என்று கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பு நடத்திய மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது

நீர் மின் உற்பத்தியில், சுமார் ஆயிரத்து 200 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை இருக்கின்றபோதிலும், நீர் இன்மையால், மதிய நேரத்தில் 300 மெகா வாட்ஸ் மின்சாரத்தையும், இரவு நேரத்தில் 700 மெகாவொட் மின்சாரத்தையும் மாத்திரமே வழங்க முடிகின்றது. எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களில், ஆயிரம் 700 மெகாட் அளவில் கொள்ளளவு உள்ளபோதும், எரிபொருள் இன்மையால், ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை மாத்திரமே வழங்க முடிகின்றது. ஆனால், இரவு நேரத்தில் மாத்திரம் ஆயிரத்து 800 மெகா வாட்ஸ் மின்சாரத்துக்கான கேள்வி உள்ளது.

மின் விநியோகத்தில் நிச்சயமாக வீழ்ச்சி உள்ளது. தற்போது பாஜ மின்னுற்பத்தி நிலையத்துக்கும், களனிதிஸ்ஸ கூட்டு மின்னுற்பத்தி நிலையத்துக்கும், ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் மாத்திரமே கிடைத்துள்ளது. எரிபொருளில் இயங்கும் வேறு எந்தவொரு மின்னுற்பத்தி நிலையத்துக்கும், எரிபொருள் கிடைக்கவில்லை. நாங்கள் அறிந்த வகையில், இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) எரிபொருள் கிடைக்காது.

விரைவாக எரிபொருளைப் பெற்றுக்கொடுத்தால், மின்சாரம் துண்டிக்கப்ப டும் நேரத்தை இயன்றளவு குறைக்க முடியும் என அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (அ-எ-இ)

### மின்கட்டண....
டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்கட்டணம் செலுத்தாத வாடிக்கையாளர்களின் பட்டியலைத் தயாரித்து அவர்களின் மின்சார இணைப்புக்களைத் துண்டிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக வாடிக்கையாளர்கள் சிலர் பல மாதங்களாக கட்டணம் செலுத்தவில்லை என்றும், அவர்களுக்குச் சிலகாலம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆயினும், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாதுள்ளனர் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் இலங்கை மின்சாரசபை எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக தகவல் ஏதும் வெளியாகவில்லை.

அதேவேளை, இலங்கை மின்சார சபையின் நிதி நிலை கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. மின்சார சபை ஊழியர்களுக்கு சம்பளம் மிகவும் சிரமத்தின் மத்தியில் வழங்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பிரதம செயலாளரான ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் ஆட்சிக்கு வந்தால்

# வெறும் 48 மணிநேரத்தில் வரிசை யுகம் மாயமாகும்

**கொழும்பு, மார்ச் 31**

**ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வரிசை யுகத்தை வெறும் 48 மணிநேரத்தில் இல்லாமலாக்குவோம். அதற்கான தகுதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் ஒரு ஆசனம் ஜனாதிபதி, பிரதமருக்கு இணையான ஆசனமாகும். ஒரு ஆசனத்தை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றப்போகின்றது எனப் பலரும் எம்மிடம் கேட்டனர். என்றாலும் ஆசனம் முக்கியமில்லை, அதற்கான ஆளுமையும் அனுபவமுமே முக்கியம் என நாங்கள் அன்று தெரிவித்திருந்தோம், தற்போது அது உண்மையாகி வருகின்றது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும் என்ற கருத்து வலுவாக அதிகரித்து வருகின்றது.

நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரில் ரணிலுக்கே அதிக அரசியல் அனுபவமும் திறமையும் இருக்கின்றது. அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வரிசையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் 48 மணிநேரத்தில் வரிசை யுகத்தை இல்லாமலாக்குவோம். அதற்கான திறமை ரணிலுக்கு இருக்கின்றது.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்துக்கொண்டு சர்வதேசத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமான ஒரு தலைவர் ரணில்- என்றார். (ம)

யாழ்ப்பாணம் போதனாவில்

## தாதிய வெற்றிடத்தை நிரப்பப் பரிசீலனை!

கொழும்பு, மார்ச் 31

யாழ். போதனா மருத்துவமனையில் தாதியர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை தொடர்பாகவும், அந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாகவும் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது குறித்து பொதுமக்களை விழிப்புணர்வூட்டும், ஆர்வமூட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று குறித்த கூட்டத்தில் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், தடுப்பூசி பெற்றுக்கொள்வது தொடர்பில் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு விழிப்புணர்வுப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது. தடுப்பூசி போடும் பணியில் அரசியல் அதிகாரிகளின் தலையீடு காரணமாக ஆரம்பக்காலத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், ஆனால் தற்போது சில பிரதேசங்களில் அரசியல் அதிகாரிகளின் ஆதரவால் தடுப்பூசி மிகவும் வெற்றிகரமாக நடந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம)

**வேலையாட்கள் தேவை**

மன்னாரில் உள்ள வெதுப்பகத்திற்கு, வேலை தெரிந்தவர்களும் (Bass), உதவியாளர்களும் (Labours) தேவை. 076 089 8020

(CS 19134) (4/6)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 90 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை**

- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும். 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை ( 350000/= )மூன்று இலட்சத்துஐம்பதுஆயிரம் மட்டும்.

தொடர்பு :

074 291 3725 /074 291 3726/074 291 3727

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி)
- 20 அடி பாதையுடன்

தொடர்பு : 077 623 4204

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 82 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து 50m நடைதூரம். A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 308 தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,

ஒரு பரப்பின் விலை 450000.00

(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-

077 814 7389, 077 241 7589

## டெங்கு ஒழிப்பு முன்னெடுப்பு



முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது குறித்த பகுதியில் நுளம்பு பெருகும் சூழல் துப்புரவு செய்யப்பட்டது. அத்துடன் நுளம்பு பெருகக்கூடிய சூழலை அடையாளங்கண்டு அவற்றைத் துப்புரவு செய்யாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் பிரதேச செயலகம், மல்லாவி பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்த டெங்கு ஒழிப்புத் திட்டத்தை முன்னெடுத்தனர். (ஒ-14-19)

## பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலிகாமம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்வி பிரிவால் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறிகள் நாளை ஆரம்பிக்க படவுள்ளன.

இதற்கமைய ஆடை வடிவமைத்தலும் தயாரித்தலும் பயிற்சிநெறி தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, அழகுக்கலை பயிற்சிநெறி இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சிநெறியில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும், ஆர்வமுள்ளவர்களும் கலந்து கொள்ளலாம். அத்துடன் மேற்கூறப்பட்ட பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 0777147036 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (14)

## 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஏற்பாட்டில் பொருண்மியம் நலிந்த 25 குடும்பங்கள் உட்பட 5 மாணவர்களுக்கு வாழ்வாதார உதவி கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை அவுஸ்திரேலிய பிரஜைகள் குழு மற்றும் பௌத்த குருமார் ஒன்றிணைந்து வழங்கினர். அத்துடன் குறித்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் கொட்டாச்சி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.